[9th September 1960

கம்யூனிட்டி என்று குறிப்பிட்டார்களோ அதை அங்கீகரித்து சர்க்கார் அதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இங்கிருப்பவர்களையும் அங்குள்ளவர்களோடு சேர்க்க வேண்டுமென்பதல்ல.

SRI A. A. RASHEED : In the list placed on the table of the House, under item 93, we find " Male ". May I know whether all males are considered as Backward Classes? (Laughter.)

(No answer.)

SRI A. R. MARIMUTHU : பின் தங்கிய வகுப்பினருக்கு ஸ்காலர்ஷிப் கொடுப்பதற்கு ஜில்லா கலெக்டர்களுக்கு அதிகாரம் கொடுத்திருப்பதாகக் கூறினார்கள். ஜில்லாக் கலெக்டர்கள் அந்தந்த ஜில்லாவைச் சேர்ந்த மாணவர்களின் மனுக்களைப் பரிசீலனை செய்ய அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறதா அல்லது அந்த ஜில்லாவிலுள்ள கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களின் மனுக்களை பரிசீலனை செய்ய அதிகாரம் உள்ளதா ?

THE HON. SRI P. KAKKAN : அந்தந்த ஜில்லாக்களில் உள்ள கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களின் மனுக்களைப் பரிசீலனை செய்யலாம்.

Tanks (Madurai district)

*559 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் மதுரை ஜில்லாவில் எத்தனை குளங்கள் மராமத்து செய்ய திட்டமிடப்பட்டது ?

(ஆ) அதில் எத்தனை மராமத்து வேலைகள் முடிந்துள்ளன ?

(இ) இன்னும் எத்தனை முடியவில்லை ?

(ஈ) இவை எப்பொழுது முடியும் ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Two hundred and seventy-eight.

(*b*) One hundred and five.

(*c*) & (*d*) One hundred and seventy-three—

Before March 1961 ...	99
1961–62	14
1962–63	27
1963–64	33
	173

DEPUTY SPEAKER : Now that the Hon. Minister for Home has come, we can take up question No. 552.